# அதிக வெப்பத்தை தாங்கக்கூடிய சிபிவிசி குழாய்கள் அறிமுகம்

சென்னை, ஜூன் 11

சாதாரண பிவிசி குழாய்களை விட அதிக வெப்பம் தாங்கக்கூடிய சிபிவிசி குழாய்களை சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

குளோரினேட்டட் பாலிவினைல் குளோரைடு என்ற அழைக்கப்படும் இத்தகைய குழாய்கள் கடந்தாண்டு முதலில் மதுரை, தூத்துக்குடியில் அறிமுகம் செய்யப்பட்டது. அங்கு இதற்கு பெரும் வரவேற்பு கிடைத்ததையடுத்து திருச்சி, கோவையில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தற்போது சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என்று செய்தியாளர்களிடம் பேசிய ரோக்கா நிறுவன மேலாண் இயக்குநர் கே.வி.ரங்கநாதன் கூறினார்.

வரும் ஆண்டுகளில் இதன் சந்தை மதிப்பை 30 விழுக்காடு கைப்பற்ற ரோக்கா இலக்கு நிர்ணயித்துள்ளதாக கூறிய அவர், ஆரம்பத்தில் சிபிவிசி குழாய்களுக்கு போதிய வரவேற்பு இல்லை என்றும் இருப்பு வைக்க 4 கிடங்குகளை மட்டுமே திறந்தோம். ஆனால் வாடிக்கையாளர்களிடம் இருந்து வந்த கருத்துக்களின் அடிப்படையில் உற்பத்தியை இருமடங்காக அதிகரித்தோம் என்றார்.

கடந்த நான்குமாதங்களில் மதுரையில்மட்டும் 10விழுக்காடு சந்தையை கைப்பற்றியுள்ளோம். சென்னையில் 30விழுக்காடு சந்தையை கைப்பற்ற இலக்கு நிர்ணயித்துள்ளோம்.விரைவில் மற்ற தென்னிந்திய நகரங்களிலும் பின்னர் படிப்படியாக தேசிய அளவிலும் இந்த புதிய குழாய்களை அறிமுகம் செய்ய உள்ளோம் என்றார் ரங்கநாதன்.